## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியாளர் தொகுதி – ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்திட 7 மாவட்டங்களில் திட்ட அலுவலகங்களை உரிய அலுவலர் / பணியாளர்களுடன் தோற்றுவித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–1) துறை

அரசாணை ( நிலை) எண்: **34**

நாள் : **25 .04.2017**
ஹேவிளம்பி வருடம்,
சித்திரைத் திங்கள் 12–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:–

பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண். ப.மே/அ.2/1390/2014,
நாள் 10.09.2014, 29.09.2014 மற்றும் 26.08.2015.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பழங்குடியினர் நல இயக்குநர், கீழ்க்குறிப்பிடப்பட்ட 7 மாவட்டங்களில் அடங்கிய 10 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களுக்கான நலப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார்:–

| வ. எண். | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | கொல்லி மலை | நாமக்கல் |
| 2 | ஏற்காடு மலை | சேலம் |
| 3 | கல்ராயன் மலை | |
| 4 | அருநூத்து மலை | |
| 5 | பச்சை மலை | |
| 6 | ஜவ்வாது மலை | திருவண்ணாமலை |
| 7 | கல்ராயன் மலை | விழுப்புரம் |
| 8 | சித்தேரி மலை | தர்மபுரி |
| 9 | பச்சை மலை | திருச்சிராப்பள்ளி |
| 10 | ஜவ்வாது மலை & ஏலகிரி மலை | வேலூர் |

**(த.பி.பா.)**

2. மேலும், பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டங்கள் சார்ந்த பணிகளை செயல்படுத்துவதற்கான பொறுப்புகள் மட்டுமன்றி, பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006-ஐ கண்காணித்து செயல்படுத்துவது என பழங்குடியினர் நலத்துறையின் பணிகள் அதிகரித்து வருவதாகவும், மைய அரசு ஒவ்வொரு வருடமும் பழங்குடி மக்கள் நலனுக்கென ரூ.35 கோடியை ஒதுக்கீடு செய்கிறது எனவும், பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளின் வாயிலாக திட்டங்களை செயல்படுத்திட ரூ.435.55 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும், மாவட்ட அளவில், வருவாய்த்துறையைச் சார்ந்த அலுவலர்களே பெரும்பாலும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களாக மாற்றுப்பணியில் குறைந்த கால அளவில் பணிபுரிவதோடு, அவர்கள் சட்டம் ஒழுங்கு சார்ந்த பொருண்மையினையும் கையாள்வதால் மிகுந்த பணிச்சுமை நிலவுவதோடு ஆதிதிராவிடர் நலத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுவதாகவும், அவ்வலுவலர்கள் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிவதால் பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு குறைந்த அளவு முக்கியத்துவமே தருவதாகவும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பழங்குடியினர் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு போதிய பணியாளர்கள் இல்லை எனவும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், பணியாளர்கள் பற்றாக்குறையால் பழங்குடியின மக்களின் நலத்திட்டங்களுக்கென மைய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், திட்டங்களை செயல்படுத்த இயலாத சூழல் நிலவுவதாகவும், பழங்குடியினர் நலத்திட்டங்களை செயல்படுத்த குறைந்த அளவு முக்கியத்துவமே அளிப்பதால், பழங்குடியினருக்கான பல திட்டங்கள் சரியான நேரத்தில் அம்மக்களை சென்றடைவதில்லை எனவும், ஒவ்வொரு வருடமும் பழங்குடியினருக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்துவதில் பழங்குடியினர் நல இயக்ககம் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதோடு, மைய அரசுக்கு குறித்த காலக்கெடுவிற்குள் பயனீட்டுச் சான்றிதழை அனுப்ப இயலாத சூழ்நிலை நிலவுகிறது எனவும் தெரிவித்துள்ள பழங்குடியினர் நல இயக்குநர், பழங்குடியினர் நலனுக்கான திட்டங்களை நன்கு செயல்படுத்திட ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளான ஏழு மாவட்டங்களில் திட்ட அலுவலகங்களை தேவையான பணியாளர்களுடன் ஏற்படுத்திட கோரியுள்ளார்.

4. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், பழங்குடியினர் நலத்திட்டங்களை செயற்படுத்திட ஏதுவாக, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் திட்ட அலுவலகங்களை ஏற்படுத்துவதற்கான செலவினத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு 275(1)-இன் கீழான மத்திய அரசின் மானிய நிதியிலிருந்து மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை ஏற்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

i) 10 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளை உள்ளடக்கிய நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் மாவட்டங்களில் 7 திட்ட அலுவலகங்களை புதிதாகத் தோற்றுவித்திடவும்;

ii) பழங்குடியினர் நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்ட அலுவலகங்களுக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தற்காலிகப் பணியிடங்களை, அப்பணியிடங்கள் **நிரப்பப்படும் நாள்முதல் ஓராண்டு காலத்திற்கு** தோற்றுவித்திடவும் ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

(த.பி.பா.)

<u>மாவட்ட அளவிலான அலுவலகம்</u>

| வ.எண் | பணியிடம் மற்றும் எண்ணிக்கை | ஊதிய விகிதம் (ரூபாயில்) | பணியமர்த்தும் முறை |
|---|---|---|---|
| 1 | திட்ட அலுவலர் -7 (மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் நிலையில்) | 15,600 - 39,100+ த.ஊ. 5,400 | i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககங்களிலிருந்து பதவி உயர்வில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களாகப் பணிபுரியும் அலுவலர்களிலிருந்து பழங்குடியினர் நல இயக்குநர், ஆதிதிராவிடர் நல இயக்குநருடன் கலந்தாலோசித்து அலுவலர்களை தெரிவு செய்து நிரப்பிடலாம்.<br>ii) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்கக அலுவலர்கள் (மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்) திட்ட அலுவலர்களாக பணியில் சேராத நிலையில், அக்காலிப் பணியிடங்களை, ஊரக வளர்ச்சித்துறையில் பணிபுரியும் உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களை மாற்றுப்பணி அடிப்படையில் பழங்குடியினர் நல இயக்குநரே பணியமர்த்திடலாம். |
| 2 | கண்காணிப்பாளர் -7 | 9,300-34,800+ த.ஊ. 4,800 + சிறப்புப் படி 500 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊரக வளர்ச்சித்துறை (மாற்றுப்பணியில்) |
| 3 | இளநிலைப் பொறியாளர்-7 | 9,300-34,800+ த.ஊ. 4,400 | i) இளநிலைப் பொறியாளர் பணியிடங்களை ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் இளநிலைப் பொறியாளர்களைக் கொண்டு மாற்றுப்பணியில் பணி அமர்த்தலாம்.<br>ii)இளநிலைப் பொறியாளர்கள் இல்லாத நிலையில், ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் பணிப்பார்வையாளர்களை (Overseers) மாற்றுப்பணியில் பணி அமர்த்தலாம் |

(த.பி.பா.)

| | | | |
|---|---|---|---|
| 4 | உதவியாளர்–7 | 5,200-20,200+ த.ஊ.2,800 | i)ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்கக இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாகப் பதவி உயர்வு அளிப்பதன் மூலம் பணியமர்த்திடலாம்.<br>ii)உதவியாளர் பணியிடங்களில் போதிய பணியாளர்களை ஆதிதிராவிடர் நல இயக்குநரால் அளிக்க இயலாத நிலையில், அப்பணியிடங்களை ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து மாற்றுப்பணியில் பெற்று பழங்குடியினர் நல இயக்குநரே பணியமர்த்திடலாம். |
| 5 | தட்டச்சர்/ கணினி இயக்குபவர்–7 | 15,000 (தொகுப்பூதியம்) | வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் (பழங்குடியினர் மட்டும்) |
| 6 | அலுவலக உதவியாளர்–7 | 8,000 (தொகுப்பூதியம்) | நாளிதழ் விளம்பரத்தின் மூலம் (as per G.O.(Ms).No.44 L&E Dept., dated 11.03.2015) (பழங்குடியினர் மட்டும்) நேரடி பணிநியமனம் |
| 7 | துப்புரவுத் தொழிலாளர்–7 | 6,000 (தொகுப்பூதியம்) | வெளி வேலைவாய்ப்பு முகமைகள் மூலம் (outsourcing) (as per G.O.(Ms).No.49, P&AR (F) Dept., dated 14.05.2002) (பழங்குடியினர் மட்டும்) |
| 8 | ஓட்டுநர்–7 | 12,000 (தொகுப்பூதியம்) | i) வெளி வேலைவாய்ப்பு முகமையான TEXCO மூலம் (out sourcing) (as per Letter (Ms).No. 255, P&AR (P) Dept., dated 06.12.2007) (பழங்குடியினர் மட்டும் )<br>ii) TEXCO நிறுவனம் போதிய ஓட்டுநர்களை அளிக்க இயலாத நிலையில், அப்பணியிடங்களை நாளிதழ் விளம்பரத்தின் மூலம் பழங்குடியினர் நல இயக்குநர் நிரப்பிடலாம். |

(த.பி.பா.)

iii) பழங்குடியினர் நலத்திட்டங்களில் செயல்பாட்டினை கண்காணித்திட ஏதுவாக, பழங்குடியினர் நல இயக்ககத்தில் அலுவலகப் பிரிவு ஒன்றினை தோற்றுவித்திடவும், அப்பிரிவிற்கு கீழ்க்கண்ட தற்காலிகப் பணியிடங்களை **பணியிடங்கள் நிரப்பப்படும் நாள்முதல் ஓராண்டு காலத்திற்கு** தோற்றுவித்திடவும் ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

<u>மாநில அளவிலான அலுவலகம்</u>

| வ. எண். | பணியிடம் மற்றும் எண்ணிக்கை | ஊதிய விகிதம் (ரூபாயில்) | பணியமர்த்தும் முறை |
|---|---|---|---|
| 1 | இணை இயக்குநர் – 1 (கல்வி உதவித்தொகை) | 15,600-39,100+ த.ஊ.7,600 | கருவூலம் மற்றும் கணக்குகள் துறை (மாற்றுப்பணியில்) |
| 2 | உதவி கணினி திட்டமிடுபவர்– 1 (Assistant System Programmer) | 9,300 - 34,800 + த.ஊ. 4,600 | எல்காட் / இதர துறைகள் (அயற்பணியில்/ மாற்றுப்பணியில்) |
| 3 | உதவி இயக்குநர்– 1 (பழங்குடியினர் கல்வி) | 15,600-39,100+ த.ஊ.5,400 | ஆதிதிராவிடர் நல பள்ளி / அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி மூத்த தலைமை ஆசிரியர் (பதவி உயர்வின் மூலம்) |
| 4 | உதவி செயற்பொறியாளர்–1 | 15,600-39,100+ த.ஊ.5,400 | வேளாண்மைப் பொறியியல் துறை (மாற்றுப்பணியில்) |

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

" **2225** ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – **02** பழங்குடியினர் நலன் – **796** பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் <u>SE</u>– ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட அலுவலகங்கள்

**01** சம்பளங்கள் – **0.01** இலட்சம்
(த.தொ.கு. **2225–02–796–SE–0100**)

**03** அகவிலைப்படி – **0.01** இலட்சம்
(த.தொ.கு. **2225–02–796–SE–0306**)

**33** தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – **04** ஒப்பந்த ஊதியம் – **0.01** இலட்சம்
(த.தொ.கு. **2225–02–796–SE–3349**)

(த.பி.பா.)

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு 'புதுப்பணி' குறித்த செலவினமாகும். இச்செலவிற்கான சட்டப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையில் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதி முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு பொது-1)த்துறையில் தனியாக வெளியிடப்படும். 2017-2018-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இச்செலவினை சேர்த்து சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதி முன்பணம் பெற உரிய விண்ணப்பத்தினை இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு பொது-1)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017-2018-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கான கருத்துருவினை தவறாது உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந /வரவு-செலவு பொது-1)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட 7 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் 7 இளநிலைப் பொறியாளர் பணியிடங்களுக்கு ஊரக வளர்ச்சித்துறையில் பணிபுரியும் தகுதி வாய்ந்த அலுவலர் / பணியாளர்களின் பட்டியலை பழங்குடியினர் நல இயக்குநருக்கு அளிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இணை இயக்குநர் (கல்வி உதவித்தொகை), உதவி கணினி திட்டமிடுபவர் (Assistant System Programmer) மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகிய பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த அலுவலர்களின் பட்டியலை பழங்குடியினர் நல இயக்குநருக்கு அளிக்குமாறு இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), வேளாண்மைப் பொறியியல் துறை ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உதவி கணினி திட்டமிடுபவர் (Assistant System Programmer) பணியிடத்திற்கு தகுதி வாய்ந்த அலுவலரை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அளிக்காத நிலையில், அப்பணியிடத்திற்கு இதர துறைகளிலிருந்து தகுதி வாய்ந்த நபரை அயற்பணியில் பெற்று பணியமர்த்த பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட புதிய பணியிடங்களுக்கான தற்காலிகப் பணிவிதிகளைத் (Adhoc Rules) தோற்றுவித்து வரைவு விதிகளை அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட அனைத்து பணியிடங்களும் <u>பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்.</u>

10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திலிருந்து தகுதிவாய்ந்த அலுவலர்/பணியாளர்களைப் பெற்று அந்தந்த பணியிடங்களுக்கான பணிவிதிகளின் அடிப்படையில், பழங்குடியினர் நல இயக்ககத்திலும், திட்ட அலுவலகங்களிலும் பணியமர்த்துமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. மேற்படி, திட்ட அலுவலகங்கள் அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அல்லது வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அல்லது வட்டாட்சியர் அலுவலகம் அல்லது ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம் அல்லது பழங்குடியின மக்கள் திட்ட

அலுவலகங்களை எளிதில் அணுகும் வகையில் அரசு அல்லது தனியார் கட்டடங்களில் செயல்படும் வகையில் உகந்த இடம் / கட்டடத்தை கண்டறிந்து அலுவலகம் செயல்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். புதிதாகத் தோற்றுவிக்கப்படும் திட்ட அலுவலகங்களின் செயற்பாட்டை கண்காணிக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் மற்றும் நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

12. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள 7 திட்ட அலுவலகங்களை செயல்படுத்துவதற்கான செலவினங்களை இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு 275(1)–இன் கீழ் மத்திய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தால் விடுவிக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ள ஏதுவாக குறித்த காலக்கெடுவிற்குள் பயனீட்டுச் சான்றிதழை மத்திய அரசுக்கு அனுப்பி, ஒவ்வொரு வருடமும் இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதியை விடுவிப்பதற்கும், அப்பணியிடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் பணி தொடர்ச்சி வழங்குவதற்கு (Further continuance) ஏதுவாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இதனை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் ப.மே–1 / க.(ம)ம.பா. பிரிவுகள் கண்காணித்து திட்ட அலுவலகங்களின் செயல்பாட்டை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

13. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 22011 / நிதி (CMPC), நாள்: 24.04.2017 கூடுதல் பேரேட்டு எண்.281 (இரு நூற்று எண்பத்து ஒன்று) –இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ப. அண்ணாமலை**
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம் சென்னை–5.
முதன்மைச் செயலாளர், தகவல் மற்றும் தொழில் நுட்பத்துறை, சென்னை-09.
முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை-09.
முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை-09.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை,
பனகல் மாளிகை, சென்னை-15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம்,
MHU வளாகம், 692, அண்ணா சாலை, சென்னை-35.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, பனகல் மாளிகை சென்னை-15.
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை- 32
மேலாண்மை இயக்குநர், TEXCO, 2-E, மேஜர் பரமேஸ்வரன் நினைவு கட்டடம்,
மேற்கு மாட வீதி, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை – 15
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்),
வேளாண்மைப் பொறியியல் துறை, 487, அண்ணாசாலை, நந்தனம், சென்னை –35.

(த.பி.பா.)

மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல்/ சேலம்/ திருவண்ணாமலை
விழுப்புரம்/ தர்மபுரி /திருச்சிராப்பள்ளி/ வேலூர்
மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல்/ சேலம்/ திருவண்ணாமலை
விழுப்புரம்/ தர்மபுரி /திருச்சிராப்பள்ளி/ வேலூர்
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நாமக்கல்/
சேலம்/ திருவண்ணாமலை/விழுப்புரம்/ தர்மபுரி /திருச்சிராப்பள்ளி/ வேலூர்
மாநில முதன்மை கணக்காய்வுத்தலைவர், சென்னை – 6/18/35.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.

**நகல்:**

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலர் அவர்களின்
முதுநிலை தனிச்செயலர், சென்னை – 9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (**அனைத்து பிரிவுகள்**), சென்னை– 9
நிதி(ஆதி(ம)பந/வரவு செலவு (பொது –I/II/ CMPC)த் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

ச. சீனிவாசன்
**பிரிவு அலுவலர்**